**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.8** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | அன்பரசன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **25.11.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொதுப்பணிதுறையில் தலைமைபொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 02.09.2016ம் தேதி பொதுப்பணிதுறை செயல்பொறியளாராக அரியலூரில் பணியில் இருந்தபோது அரியலூர் காவல் நிலைய உதவிஆய்வாளரின் வேண்டுகோளின்பேரில் அப்போதைய எங்கள் துறையின் உதவிபொறியாளர் அப்பாதுரையின் நிலத்தை பார்வையிட்டு தயாரித்த அறிக்கையின் அடிப்படையில் நான் சேதமதிப்பு சான்று வழங்கினேன். ரூ.19,635/-க்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக சான்று வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.4 ஆகும். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அப்பாதுரையின் நிலத்தை நேரடியாக பார்க்கவில்லை. உதவிபொறியாளர் கொடுத்த அறிக்கையை நான் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை. அ.சா.ஆ.4 சான்றில் எந்தெந்த பொருட்கள் சேதம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எவ்வாறு சேததத்தை மதிப்பீடு செய்தேன் என்ற விவரம்

அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கம்பிவேலியின் விலையானது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இடையே விலையில் வேறுபாடு இருக்கும் என்றால் சரிதான். தரத்தை பொறுத்து கல்லின் விலையில் வேறுபாடு இருக்கும் என்றால் சரிதான். அரசு வழிகாட்டியின் படி நாங்கள் மதிப்பீடு செய்வோம். அ.சா.ஆ.4 சேதமதிப்பு சான்று ஏற்க்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.